Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்துசாதனம்

விரோதி ௵ (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சூஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி௵ ஐப்பசி௴ ௩௨ வெள்ளிக்கிழமை (19 OCT. 1956) [இல-உஎ]

# சைவபரிபாலனசபை 68-ம் ஆண்டுக் கூட்டம்

## மதத்துக்கும் மொழிக்கும் தவராத தொண்டு

## சமயபாடத் திறமைக்குத் தங்கப் பதக்கம்

ஆண்டுக்கு ஆண்டு இச்சபை வளர்ந்துகோண்டு வருகின்றது. இறைவன் திருவருளாலும் சமபாபிமானிகளின் இடையறு முயற்சியினலும் இப்பயனை எய்திருக்கின்றது தமிழ் மோழிக்கு ஆபத்து நிகழ்ந்திருக்கும் இவ்வேளையில் இறைவன் பணியில் நின்று அஞ்சாது தோண்டாற்றும் சபைகளே ஆறுதல் அளிக்கக்கூடியனவென்று யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் 68-ம் ஆண்டுக் கூட்டத்திலே தலைவர் திரு. த. முத்துசாமிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டார்கள்.

கூட்டம் சபையாரின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்குத் தேவார பாராயணத்துடன் ஆரம்பமானது.

சபையின் தலைவராக நெடுங் காலமாகப் பெரும் பணிபுரிந்து இவ்வுலக வாழ்வு நீத்த திரு. இ. சிவகுருநாதர் அவர்களின் நினைவுக்காகக் கூட்டத்திலுள்ளவர்கள் இரண்டு நிமிடங்களுக்கு மௌனமாக எழுந்து நின்றனர். முதலியார் செ. முத்துத்தம்பி அவர்கள் திரு. சிவகுருநாதரின் குணாதிசயங்களை எடுத்துரைத்து அந்தச் சைவப் பெரியாரும் அவரது உத்தம பத்தினியும் சைவக் கல்வி வளர்ச்சிக்காக இந்து மகளிர் கல்லூரி நிலுவ நிலம் வழங்கின வள்ளன்மையை உலகம் ஒருபொழுதும் மறக்கமாட்டாதென்று கூறினர்.

அதன்பின் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் 1955-ம் ஆண்டு சைவசமய பாடத்தில் முதலாவதாகத் தேறிய உசன் சைவப் பாடசாலை மாணவி செல்வி கனகம்மாவுக்குச் சபையார் சார்பாக திரு. முத்துச்சாமிப்பிள்ளை அவர்களாலே தங்கப்பதககம் வழங்கப்பெற்றது.

செல்வி கனகம்மா கூட்ட நிகழ்ச்சியிற் பங்குபற்றித் தேவார பாராயணம் செய்தனர்.

சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்கள் குறிப்புக் கூறும்பொழுது சைவத்துக்கு ஆபத்து நிகழ்கின்றது என்று பலர் கூறக் கேட்டிருப்பதாகவும் அவ்வாறு குறிப்பிடுதல்பொருத்தமாகா தென்றும் சைவ சமயம் யாராலும் எக்காலத்திலும் தாக்கப்படக் கூடிய தொன்றல்ல வென்றும் சைவர்களே ஆபத்துக்குட்பட்டிருக்கின்றார்கள் என்றும், ஆனல் திருத்தொண்டர் பரம்பரையிலே சைவர்கள் இன்னலுற்றபொழுதெல்லாம் இறை வழிபாட்டின் மேன்மை பன்மடங்கு சிறந்தோங்கி இடர்கள் நீங்கப்பெற்ற உண்மை இக்காலத்துச் சைவர்களுக்கு உறு துணையாயிருக்கும் என்றும் எடுத்துக்காட்டினார். களிம்பும் செழும்பும் போக்குவதற்குப் புளி போடுதல் உலக வழக்கமாதலால் இப்பொழுது தமிழ் பேசும் மக்களுககுப் பிறர் புளி போடுவதும் ஒரு வகைக்கு நன்மையாய் முடியும் என்றும் உதாரண வகையாய்க் கூறினர்.

ஆண்டு அறிக்கையும் கணக்கு அறிக்கையும் சபையாரால் ஏற்கப் பட்டன. முதலியார் முத்துத்தம்பி அவர்கள் சபை வளர்ச்சி நன்றாயிருப்பினும் இன்னும் மேலோங்குதற்கு எல்லாச் சைவர்களும் இச்சபையிற் சேர்ந்து இந்து சாதன வெளியீட்டை வரவழைத்துச் சமயத் தொண்டாற்றுதல் வேண்டப்படுகின்றது என்று குறிப்பிட்டார்.

திரு சி. க. வேலாயுதபிள்ளை அவர்கள் சபையாரின் புத்தக வெளியீடுகள் சைவப்பள்ளிக்கூடங்களிலே கூடுதலாக உபயோகிக்கப்படுதற்கு ஒழுங்குகள் செய்யப்படல் வேண்டும் என்று பிரேரித்தனர். இப்பிரேரணை நிறைவேறியது.

உத்தியோகஸ்தர்கள் தேரிவு

தலைவர் திரு.
த. முத்துச்சாமிப்பிள்ளை
முடிக்குரிய நியாயவாதி

உபதலைவர்கள்
Dr. C. குருசாமி
Dr. K. இராசா

செயலாளர்
திரு. ஆ. தனபாலசிங்கம்
வழக்கறிஞர்

உதவிச் செயலாளர்
திரு. V. கார்த்திகேசு
ஆசிரியர்

தனதிகாரி
முகாந்திரம்
E. P. இராசையா

திருவாகசபைப் புதுஅங்கத்தினர்
திரு. C. குமாரசுவாமி
திரு S. சிவசுப்பிரமணியம்

செயலாளர் திரு. ஆ. தனபாலசிங்கம் அவர்கள் நன்றியுரை கூறினர். தேவார பாராயணத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

அரசியல் அலை

## விசை வண்டிச் சேவை விரைவிலே தேசிய மயமாகுமாம்!

### இடதுசாரிகளுக்கு இடங்கொடுக்காமல் சமூக மாற்றங்களா?

டேர்துத் தேர்தலிலே ம. ஐ. மு. அபேட்சகர்கள் கோடுத்த வாக்குறுதிகள் அவர்கள் பெற்ற வாக்குச்சீட்டுகளிலும் பார்க்க எண்ணிற்கூடியன. ஒன்றுவது நன்ருகப் பூர்த்தி செய்யப்படவில்லை. அரிசி விலையை ஒரு பத்துச்சதம் குறைத்துவிட்டு அவலப்பட்ட அரசாங்கத்துக்குத்தான் தேரியும் மாற்றம் செய்வது மந்திர வித்தையாலன்று என்று.

விசை வண்டிச் சேவையை அரசபரிபாலனத்தின் கீழ் அமைத்தல் வேண்டும் என்று இடதுசாரிகள் கேட்ட வண்ணமாக இருந்தனர். இடது கூடியும் வலது குறைந்தும் கூட்டுக் கட்சியான ம. ஐ. மு. ஆதிக்கம் பெற்றதும் விசை வண்டிச் சேவையைத் தேசிய மயமாக்க உண்மையிலே துணியவில்லை. துணிந் திருந்தாற் பண நட்டத்தால் அரசாங்கமே பழுதுற்று விடும் என்று பயந்து சிறிது சிறிதாக மெல்ல மெல்ல இந்தச் சீர்திருத்தத்தைக் கொண்டு வரலாம் என்று எண்ணியது. ஆனல் இதற்கிடையிலே கொழும்பு மாநகர சங்கத் தேர்தல் வந்து விட்டது. இடதுசாரிகள் அரசாங்கத்தின் வாக்குறுதிகளை நினைவுக் கழைத்துப் பொது மக்களின் மனப்பான்மையை மாற்றிவிடக் கூடும் என்று பயந்த ம. ஐ. மு. உடனடியாக விசை வண்டிச் சேவையைத் தேசிய மயமாக்கவேண்டுமென்று முடிவு செய்ததாகச் செய்தியை வெளியிட்டிருக்கின்றது.

# ஆன்ம ஐக்கியம்

## துன்பம் துடைத்து இன்பம் பெறும் வழி

சர்வவியாபியாய்ச் சச்சிதானந்தப் பொருளாயுள்ள முழு முதல்வருக்கு வணக்கம்.

ஈறில்லாது அன்பு நிறைந்த ஆன்மாவே சத்தியத்தைக் கடைப்பிடி. உனக்கு நீ உண்மையாயிருப்பாயாக. உன்னுடைய சிந்தையும் சொல்லும் செயலும் ஒன்றுபட்டிருக்கட்டும். உன்னை ஒருமுகப் படுத்துதற்கு இஃதே வழியாகும். ஒரு முகப்படாமலிருந்து இன்பத்துடனும் சமாதானத்துடனும் நீ எப்படி வாழமுடியும்? பொறிவழியிற் சென்று இன்பம் பெறமுடியாதென்பதை ஞான நூல்களிலிருந்தும் ஞானிகளின் சொற்களிலிருந்தும் உனது சொந்த அநுபவத்திலும் அறிந்திருக்கின்றாய். உண்மையுள்ளவனுயிரு. சிற்றின்ப வேட்கையைக் கைவிடு. பொறிவழியிற் சென்று இன்பம் பெறலாகுமென்று உன்னை நீ மயக்காதே.

ஆழ்ந்த நித்திரை உனக்கு எதை அறியத்தருகின்றது? நீ நாள்தோறும் செய்யும் நெருக்கடியான கருமங்களுள்ளே இந்த அதிசயமான ஆழ்ந்த நித்திரையைப்பற்றிச் சிந்தித்ததுண்டா? ஆழ்ந்த நித்திரை நேரத்தில் நீ இந்த உலகிலிருந்து பிரிக்கப்பட்டிருக்கின்றாய். அப்பொழுது நீ போகக்கூடிய உனது கடைசியான உட்பக்கத்துக்குப் போய்விடுகின்றாய். அங்கே சமாதானத்தையும் இன்பத்தையும் அனுபவிக்கின்றாய். மனிதன் ஆறுதலடைந்து புதுவலி பெற்று வருவதற்கு நித்திரை உதவுகின்றது அதை நினைத்து நித்திரை அறியத்தரும் இரகசியமான ஆன்மார்த்த உண்மையை மறந்துவிடாதே. உனக்குள்ளே சமாதானமிருக்கின்றது இன்பமிருக்கின்றது என்பதை அது அறிவுறுத்துகின்றது. இதை அனுபவிக்க முயன்றிருக்கின்றாயா?

இந்த அனுபவத்தை எப்படிப்பெறுவது? நீ உனக்கு உண்மையாயிரு. உன்னுடைய கொள்கைகளை உண்மையாகக் கடைப்பிடி. உண்மையாயிரு. இவையே வாழ்க்கையில் உண்மையாய் வேண்டப்படுவன. ஒழுக்கநெறிபற்றி உனக்குத் தெரியும். இந்த உலகின் தன்மையையும், ஆதி அந்தம் அற்றவனும் நீ

தொடர்ச்சி 5-ம் பக்கம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

யாழ். துர்முகி ஹூ ஐப்பசி மீ ௩௨ வெள்ளிக்கிழமை

## தூற்றினும் தூற்றுவர்.........!

இந்து மதத்தின் இன்பத்தை எல்லாரும் அனுபவித்தல் வேண்டும் என்றே இந்த உரிமைப் போராட்டத்தை நடத்துகிறேன் என வீரம்பேசி நின்ற கலாநிதி அம்பேத்கார் அந்த மதம் ஏற்றத்தாழ்வையும் அடக்கு முறையையும் கையாளுகின்றதாகையால் அது சம்மதமாகாதென்று கூறி வேறு மதம் புகுந்துவிட்டாரென்று பெருமிதங் கொள்வதோடு தமது பரம்பரைச் சமயத்தைத் தூற்றியுந் திரிகின்றார்.

... .... .... ...

மொழியிலார்க்கு ஏது
முதுநூல் தெரியும்
விழியிலார்க்கு ஏது விளக்கு

என்றாங்கு மெய்யறிவில்லாமையால் அகக்கண் பார்வையற்றிருக்கும் திரு. அம்பேத்கார் அவர்களுக்கு இந்து மதத்தின் ஒளி எவ்வாறு புலப்படும். அரசியல் வாழ்க்கையிற் பாரத நாட்டிலே பயன்பெற முடியாத வகையிலே உள்ளம் உடைந்து தள்ளாடுகின்ற திரு. அம்பேத்கார் இவ்வாறு விபரீதமாக வேடிக்கை செய்தல் விநோதமன்று.

ஆசிய கண்டத்துத் தத்துவநூல் ஆராய்ச்சியாளர்கள் மட்டுமன்றி மேனாட்டுப் பேரறிஞர்களும் இந்து சமயமே சமயம் என்றுவியந்து உரை பகர்ந்திருப்பதை நன்கறிந்த திரு. அம்பேத்கார் அத்தனை வித்தகர்களையெல்லாம் துரும்பாக மதித்துத் தாம் நுண்மதி படைத்த பண்டிதர் ஆக ஒரு மதிப்புத் தேடிவிடலாம் என்று பண்பற்ற சொல் சொல்லியிருக்கின்றார்.

"பல்லார் முனியப்
பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப்படும்"

என்றபடி ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற் புகுவதிற் பெருமையடையும் திரு. அம்பேத்கார் பெரும்பயன் உடையசொல் ஆற்றுவதற்கு அரும்பயன் ஆயும் அறிவில்லாத நிலையிலிருக்கின்றார் என்று உலகம் அகத்தே நகைக்கும் என்பதை யாம் எடுத்துக் கூறவேண்டியதில்லை. பல வேறு மதத்தினராலும் இல்லை வேறு ஒழுக்கநூல் என்று வியந்துரைக்கப்படும் திருக்குறளில் "பயனில் சொல் பாராட்டுவானை மகன் எனல் மக்கட்பதடி யெனல்" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறப்பட்டிருப்பதையும் ஈண்டு நோக்குதல் நன்று.

அன்பு சிவம் இரண்டு என்பர் அறிவிலார் என்று இந்து மதத்தின் பரந்த நோக்கை அவையடக்கமாகக் கூறியிருக்கும் திருமந்திரத்தின் பொருளை அறியும் ஆற்றலில்லாத திரு. அம்பேத்கார் அவர்களுக்குச் சமயங்களைச் சீர்தூக்குந் தத்துவம் எங்ஙனம் இருக்கும்? பொருள் நனி சுரக்கும் அரிய நூல்களைத் திரிகரண சுத்தியுடன் உரிய ஆசானிடம் முந்தையர் முறைப்படி கற்றுச் சிந்தை தெளிவதே நன்று என்று திரு. அம்பேத்கார் அவர்களுக்கு அவர் நன்மை கருதிப் புத்திபுகட்டுகின்றோம். ஆணவ மதத்துக்குரியராய் இருக்கும் திரு அம்பேத்காரர் அவர்களுக்கு எந்த மதந்தான் ஏற்றுக்கு? கையால் நீரள்ளிக் கடல் வற்ற வைக்க எண்ணிய எண்ணந்தான் என்னே!

### வளர்பிறைபோல் வளருகின்றது

அறுபத்தொன்பதாவது ஆண்டிற் புகுந்திருக்கின்றது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் சைவாபிமான உணர்ச்சியிலே தோன்றிய சைவபரிபாலன சபை. மெய்ச்சமய உணர்ச்சியையும் தாய்மொழி அபிமானத்தையும் ஒருங்கு வளர்ப்பதற்கு உழைத்து வரும் இச்சபையின் நற்பணிகள் பல. அரசியல் சமுகவியல் முதலியவற்றில் அளப்பரும் கவனம் காட்டும் அன்பர்கள் இறைநெறியியலிலும் உரிய உணர்ச்சி கொள்ளுகின்றாரில்லை என்பது சைவ சங்கங்களிற் சேர்ந்து தொண்டாற்றும் நேயர்களின் தொகையிலிருந்து புலப்படுகின்றது.

எனவே கலகமே மயமான உலகிற் கலக்கம்நீங்கி அமைதி அமைவதற்குச் சமயநெறி இன்றியமையாது வேண்டப்படுகின்ற உண்மையை அனைவரும் உணர்ந்து சைவபரிபாலன சபைபோன்ற சங்கங்களிலே சேர்ந்து மதத்துக்கும் மொழிக்கும் தொண்டாற்றுவார்களாக.

ஆண்டுக் கூட்டத்திலே தலைமை வகித்துப் பேசிய திரு. த. முத்துச்சாமிப்பிள்ளையவர்களும் குறிப்புரை கூறிய Sir. கந்தையா வைத்தியநாதன் அவர்களும் எடுத்துக் காட்டியதுபோலச் சைவ சமயத்திற்கு யாராவது எப்பொழுதாவது தீங்கிழைக்க முடியாது. என்னை? இறைநெறி காட்டும் மெய்ச் சமயம் ஆகையால், சைவர்கள் காலத்துக்குக் காலம் இடர்ப்படுகின்றார்கள் என்றால் அன்னார் இன்னமும் பன்மடங்கு தெய்வத் திருப்பணி செய்தல் வேண்டும் என்ற உண்மையை

# செய்தி தெரியுமா?

சிட்டுக் குருவி

**அவர் வரவில்லை அந்த ஜயந்தி விழாவுக்கு—**

உதவி மந்திரி ஒருவர் யாழ்ப்பாணத்திலே நடைபெறவிருந்த புத்த ஜயந்திக் கூட்டத்துக்கு வந்து உதவி அளிப்பதாக செய்தி தெரிவித்தும் நிகழ்ச்சி அவ்வாறு நடைபெறவில்லை. காரணம் திரு. C. R. வெலிகமன என்ற பாராளுமன்ற அங்கத்தவர் அதற்கிணங்கவில்லையாம். மந்திரி ஜயசூரியா இரகசியம் ஏதோ இவருக்குச் சொல்லிவிட்டார் போலும்!

**நாள் நட்சத்திரம் சரியில்லையா.........?**

கொழும்புமாநகரசபைத் தேர்தலுக்கு முன் குறிக்கப்பட்ட நாள் இப்பொழுது மாற்றப்பட்ட செய்தி பிரதமருக்குத் தெரியாதாம்! பத்தா பூலோகமா என்று கூறும் திரு. பண்டாரநாயக அவ்வித மாற்றத்திற் பிழையில்லை என்கின்றார். ஐ. தே. கட்சி அலுவல்களில் ஒரே பாய்ச்சலாக பாய்ந்து வந்த திரு. பண்டாரநாயக. அதே வழிவகைகளை இப்பொழுது கை ஆளுவது பிழையில்லையென்பதை யார் மறுப்பார்? வெளியூர் சென்று திரும்பிய பின்பு சுபவேளையிலே தேர்தல் வைத்தால் ம. ஐ. முன்னணி வெற்றி நிச்சயமாகுமல்லவா? இதற்கேன் சோதிடம் கேட்க வேண்டும்?

## யாழ்ப்பாண நகரசபைத் தீர்மானங்கள்

யாழ்ப்பாண நகரசபையின் சென்ற கூட்டத்திலே சொல்லளவில் நில்லாது சொல்லைச் செயலிலும் சாதிக்கவேண்டுமாகையினால் சபை நடவடிக்கைகள் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மாற்றுதற்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் தகுந்த அறிவுள்ளவர்களை அத்தொடர்பிற் செயலாற்றும் பதவிகளுக்கு உடனே நியமிக்க வேண்டுமென்று முதலியார் செ. மூத்துத்தம்பி ஒரு பிரேரணை கொணடு வந்தார். ஹாஜி. வி. எம். எப். அபுசாலி அதை அநுவதித்தார். காதி. எம. எம். சுல்தான் ஸ்ரீ ஏ.ரி. துரையப்பா முதலியோர் அதை எதிர்த்துப் பேசினர். வேண்டிய ஒருவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருப்பதால் பிரேரணை வேண்டப்படவில்லை என்றார் தலைவர் எஸ். நவரத்தினம். பிரேரணை கைவிடப்பட்டது.

அரசாங்க அலுவல் நிலையங்கள் நகரசபையின் பல இடங்களிற் பரந்து கிடத்தலால் பொது மக்களும் உத்தியோகத்தரும் பெரும் இடைஞ்சற்படுகின்றார்களாகலின் அவை எல்லாவற்றையும் ஓர் இடத்தில் வைக்கத்தக்க கட்டிடமொன்று அமைத்தல் வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் மற்றொரு பிரேரணை முதலியார் செ. முத்துத்தம்பி அவர்களாற் பிரேரிக்கப்பட்டு ஹாஜி. அபுசாலி அவர்களால் அனுவதிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

# இம்மை மறுமை இன்பம்

# கந்தரலங்காரம் தரும்

9-10-56 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இந்துவாலிபர் சங்க ஆதரவில் தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவரும் மைசூர் சர்வகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியருமான திரு எஸ். உருத்திரபதி எம். ஏ. அவர்கள் 'கந்தரலங்காரம்'என்னும்பொருள் பற்றி மேற்படி கல்லூரிப் பிரதமாசிரியர் திரு. வி. எம். ஆசைப்பிள்ளை அவர்கள் தலைமையில் நிகழ்ந்த சங்கக் கூட்டத்தில் ஓர் அரிய விரிவுரை நிகழ்த்தினார்கள். அருணகிரிநாதரால் பாடப்பெற்ற இத்தோத்திரம் சிறுவர் முதியோர் யாவராலும் பாராயணம் செய்தற்குச் சிறந்த தோத்திர நூலெனவும் பாராயணஞ் செய்பவர் இம்மை மறுமை யின்பங்களை இலகுவில் அடையலாம் எனவும் பாத்திரங்களைப் புளி மணலிட்டு விளக்கினால் அவை எவ்விதம் அழுக்கு நீங்கப்பெற்றுப் பிரகாசத்தைக் கொடுக்குமோ அவ்விதம் இத்தகைய

நினைவு கூட்டுவதற்காக என்க.

நமச்சிவாயவே
ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே
நானறி விச்சையும்
நமச்சிவாயவே
நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே
நன்னெறி காட்டுமே.

### சரஸ்வதி பூசை

அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் 12-10-56 வெள்ளிக்கிழமை கல்லூரிச் சைவசமயப் பிரசார மன்றத்தின் ஆதரவில் கல்லூரி ஆசிரியர் திரு. ச. பொன்னம்பலம் அவர்கள் மேற்பார்வையில் சரஸ்வதி பூசை சிறந்த முறையில் நடைபெற்றது. சங்கீத பூஷணம் செல்வி மங்களேஸ்வரி சதாசிவம் குழுவினரின் இன்னிசை விருந்தும் பண்டிதர் இ. நமசிவாயம் அவர்களின் "கடவுள் வணக்கம்" என்னும் பொருள்பற்றிய சொற்பொழிவும் விழாவின் முக்கிய நிகழ்ச்சிகளாயமைந்தன. சங்கீத ஆசிரியர் திரு. சி. சிவஞானம் அவர்கள் தலைமையில் மாணவர்கள் பக்திப்பாடல்கள் பாடினார்கள்.

### தோட்டப் பகுதியில்

பனையை தோட்ட இந்து மாணவர் மன்றத்தினரால் தோட்டப் பாடசாலை மண்டபத்தில் சரஸ்வதி பூசை சிறப்பாகச் செய்யப்பெற்றது

பக்திப் பாடற் குழுவுக்கு திரு. வ. பெருமாள்பிள்ளை தலைமை வகித்துக் கூட்டுப் பிரார்த்தனை நடத்தினர். கடவுள் வழிபாடு என்னும் விஷயத்தில் ஆசிரியர் ம. க. நடராசா சொற்பொழிவு நிகழ்த்தினர்.

### ஸ்ரீ சுப்பைய தேசிகருக்குப் பிரியாவிடை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இந்துக்கல்லூரித் தலைமை ஆசிரியர் ஸ்ரீ வி. எம். ஆசைப்பிள்ளை அவர்கள் தலைமையில் 15-10-56 பிற்பகல் இந்துக்கல்லூரி இசை ஆசிரியர் திரு. எம். சுப்பையா தேசிகர் அவர்களுக்குப் பிரியாவிடை கூறும் உபசாரக் கூட்டமொன்று நடைபெற்றது.

தலைவருடன் வித்துவான் கே. கார்த்திகேசு, திருவாளர்கள் கே. சிவராமலிங்கம், வி. ஏரம்பமூர்த்தி ஆகியோர் தேசிகர் அவர்கள் சைவத்துக்கும் தேவாரப் பண்ணுக்கும் தமிழ்மொழிக்கும் இந்நாட்டிற் செய்த சிறந்த சேவைகளை உணர்ச்சி மீதூரப் பாராட்டிப் பேசினார்கள்.

அவர்மீதுள்ள அன்பிற்கறிகுறியாகப் பொற்கிழி ஒன்றும் வழங்கப்பட்டது. ஆசிரியர் திரு. மு. மயில்வாகனம் நன்றியுரை கூறினார்.

தோத்திர நூல்கள் ஓதுகின்றவர்களுடைய மன விருளைப் போக்கி ஞானவொளியைக் கொடுக்க வல்லன வெனவும் சமய சாதனைகள் கிரமமாக மாணவர்களால் அவசியம் அநுட்டிக்கப்படவேண்டுமெனவும் பிரசாரகர் தமது விரிவுரையிற் குறிப்பிட்டார். வித்துவான் க. கார்த்திகேசு அவர்கள் பிரசாரகருக்கு ஈற்றில் நன்றிகூறினார்கள்.

## ஐ. நா. சபையில் சுவேசுப் பிணக்கு

சுவேசுப் பிணக்கு ஐக்கியநாட்டுச் சபைக்குக் கொண்டு போகப்பட்டது, அத்தொடர்பில் ஆங்கிலேயப் பிரான்சிய பிரேரணை ஒன்று பிரேரிக்கப்பட்டது. பேச்சு நடத்துதற்கு அத்திபாரமாயுள்ள அதன் முற்பகுதி ஏகமனதாக ஏற்கப்பட்டது. பதினெட்டு நாடுகளின் ஆதாரவைப் பெற்ற அதன் இரண்டாம் பகுதி உருசியாவின் தடை உரிமை வாக்குப் பிரயோகத்தால் தள்ளப்பட்டது. ஆயினும் சமாதானப் பேச்சுக்கள் நன்கு நடைபெறலாகும் என்று ஐ. நா. சபையைச் சார்ந்தோர் நினைக்கின்றார்களாம்.

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் அடைவு பிடிக்கும் ஊர்காவற்றுறை சிவகலே கனகரெத்தினம் அவர்களின் அடைவு கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணை தப்பி மீட்கப்படாமல் இருக்கும் இதன்கீழ் விபரிக்கப்படும் நகைகள் 1-11-56 வியாழக்கிழமை பிற்பகல் இரண்டு மணி தொடக்கம் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| (1) | 4226 | 1-9-54 | S. மனுவேற்பிள்ளை கரம்பன் கிழக்கு ஒரு குருசு |
| (2) | 4425 | 13-9-54 | சு. பிறைகுடி சரவணை ஒரு சோடி வளையல் |
| (3) | 4634 | 27-9-54 | க. குணரெத்தினசிங்கம் புங்குடுதீவு ஒரு சோடி வளையல் |
| (4) | 4920 | 20-10-54 | வ. செல்வரத்தினம் ஊர்காவற்றுறை மேற்கு ஒருசோடி காப்பு |
| (5) | 5134 | 2-11-54 | இ கணபதிப்பிள்ளை அனலைதீவு ஒரு சோடி தோடு |
| (6) | 5564 | 1-12-54 | வே. சின்னம்மா சரவணை கிழக்கு ஒரு தாலி |
| (7) | 6258 | 19-1-55 | வி பாலசிங்கம் சரவணை ஒரு சோடி சிறு வளையல் |
| 8) | 7027 | 4-4-55 | S. இ[illegible]ரை ஊர்காவற்றுறை ஒரு சங்கிலியும் பென்டனும் |
| (9) | 7047 | 4-4-55 | அ. பேரம்பலம் சரவணை ஒரு மோதிரம் |
| (10) | 7077 | 9-4-55 | வெ தம்பையா ஊர்காவற்றுறை ஒரு புரூச்சு |
| (11) | 7126 | 12-4-55 | அ. மரியாம்பிள்ளை கரம்பன் கிழக்கு ஒரு சோடி வளையல் |
| (12) | 7161 | 13-4-55 | S. அருளானந்தம் ஊர்காவற்றுறை மேற்கு ஒரு தாலியும் குருசும் |
| (13) | 7572 | 25-1-55 | க. சுப்பையா நாரந்தனை வடக்கு ஒரு குண்டுவைத்த அரைப்பவுன் |
| (14) | 7581 | 26-5-55 | மு. சண்முகம் பருத்தியடைப்பு ஒரு தாலி |

காரைநகர்,
10-10-56. [M. 375 12, 19-10-56] வை. ஏரம்பமூர்த்தி
Auctioneer

## கொத்தலாவலவுக்குக் கல்வி மந்திரிகாட்டும் வழி

கேகாலைப் பகுதியில் நடந்த பள்ளிக்கூடத் திறப்பு விழா ஒன்றிலே கல்வி மந்திரி ஸ்ரீ தகநாயக பேசும்போது சேர், ஜோன் கொத்தலாவல பாடிகாவலரையும் இராணுவத்தினரையும் தம் வசம் வைத்துக்கொண்டு அரசாங்கத்தைக் கவிழ்க்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார் என்று குற்றம் சாட்டி அவர் இங்கேயிருப்பதிலும் பார்க்க இந்நாட்டை விட்டு வெளியேறுவதே நல்லதென்று கூறினாராம்.

# கீதார்த்த உபதேசம்

## சிவபாத்துவத் தெளிவு தருவது

செ. கோவிந்தசாமி அவர்கள்

கீதார்த்த உபதேசத்தில் அறிவுறுத்திய தத்துவத்தினை அருச்சுனன் சரியாயுணர்ந்திலன். கண்ணபிரான் அனுகிதாரம்பத்திற் கூறியது கொண்டே கீதையிற் கூறிப்போந்த உண்மையை அருச்சுனன் கொள்ளாதுவிட்டான். இதனால் அருச்சுனனுக்குஐயப்பாடு உளதென்பது தெற்றெனத் துணியப்படுமென்க! கண்ணபிரான் அருச்சுனா! யான் முன்பு யோகத்தில் ஏறிய மெய்ச் சிந்தையின் நிற்கும் வாய்மை உரைத்தேன்" அஃதாவது நான் அக்காலத்துச் சோகம் பாவனையினெய்திய மெய்யுணர்வினால் உனக்கு உண்மை கண்டு கூறினேன். இக்காலத்து அம்மெய்யுணர்வு நீங்கிப் புறவிந்திரியக் காட்சியுடையனயினேன். ஆதலின் உனக்கு ஐயம் நீங்கித் தெளிவுண்டாகப் பொருளின் உண்மை நிலை தெளிந்து உரைக்கும் வன்மையுடையனல்லன், எனக் கண்ணபிரான் கூறினன். பின் கண்ணன் தன் உரைத்திறத்தினால் அருச்சுனனுக்கு இருந்த ஐயப்பாடுகளைத் தெளிவித்தார். அதுவுமன்றிக் கண்ணபிரான் சென்றகாலத்தில் ஒரு சித்தன் காசிபனுக்கு உரைத்த கதையின் குறிப்புப் பொருளை அறிந்து அதன் மூலம் அருச்சுனன்மாட்டுளதாய நட்புங் காரணமாகக் கீதையில அவன் ஐயுற்ற பொருளைத் தெளிவித்தான். இதுமட்டா! கண்ணபிரான் அருச்சுனனுக்கு ஆறு கீதார்த்தத்தில் நிச்சய உணர்வு பிறக்கும் பொருட்டுத் தான் கேட்டுணர்ந்த இதிகாசப் பொருளை பிராமணத் தம்பதியாகப் புனைந்து சற்குருவுக்கும் மாணுக்கனுக்கும் நிகழ்வதொரு சம்வாத நெறியினால் இனிது புலப்படுத்தினர்.

பின் மாணவன், பொருள் தெரியும்பொருட்டு ஆசிரியனை வினவிய, பூதங்கள் யாவை? யான் ஆர்? நீயார்? பரம்பொருள் யாது? என்ற வினுக்களுக்கு ஆசிரியன் இறுத்த பிரம ஞான வீட்டுநெறியினைக் கண்ணபிரான் அருச்சுனனுக்கு அறிவுறுத்தினன். அதற்கு அருச்சுனன் ஆசிரியன் மாணுக்கன் எனப்பட்டார் யாவர் என்ன, கண்ணபிரான் நானும் மனமும், ஆசிரியனும் மாணுக்கனும் ஆவேம் என அறிக என்றார்.

இது முடிந்ததும் கண்ணபிரான் தன் தூய மனத்தின் கண்ணே நிறுத்திய பிரம பாவனையில் விளைந்த ஞானத்தினால் இருதய பந்தம் விட்டப்பட்டு சீவன்முத்தன் ஆனதைத் தெளிவிக்க வேண்டியே ஆதிபுருடனைச் சரணடைகிறான். இதனை அருச்சுனனுக்கு விளக்கு தற்பொருட்டாகும். சோகம் பாவனை கொண்டே உயிர்கள் தோறும் பொருந்தி உறைகுவன் எனக் கீதையில் கூறினேன் என்று கண்ணபிரான் அருச்சுனனுக்கு அறுநீதையினால் மலைவறுத்தார். சோகம் பாவனையென்பது — தன்னைக் கடவுளாகப் பாவித்தல். அஃதாவது தான் ஆன்மா என்ற கருத்தை விட்டுத் தனக்கு உயிராகிய சிவமாகத் தன்னைப் பாவித்தல். இது நல்லொழுக்கத்துக்கும் உலகப்பற்று நீங்குதற்கும் சிவசமாவதற்கும் பெருந்துணையாகும்.

மகாபாரதத்தில் கண்ணன் தான் ஒரு தெய்வத்தினையும் உபாசித்தல் செய்கின்றிலன் என்று தரும புத்திரனுக்குக் கூறிய வசனம் உதிட்டிரனுக்குத் தன் கடவுட் பக்தி மிகுவித்தல் வேண்டியேயாம்.

குற்றம் நீங்கிய ஞானிகள் நீலகண்டனைச் சேவியார் என்று கூறியது என்னையோ எனின் சிவனுள் அடங்கி ஏகனுகப் பெற்றனர் ஞானிகள் என்பதனலாம். இவ்வாறு கொள்ளாதவழி அகர்வசிகை முதத

தொடர்ச்சி 4ம் பக்கம்




# வரகவி. கிருஷ்ணன்

## சேவைகளுக்கு ஞாபக சின்னம்

திரு. நா. சேனுதிராசா
யாழ் கமக்காரர்சங்கத் தலைவர்

எம்பெருமான் வரதராசப்பெருமான் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பொன்னுலையில் இற்றைக்கு அறுபது வருடங்கட்கு முன் வரகவி கிருஷ்ணன் பிறந்தார். இவரின் பிதா கணபதிப்பிள்ளை. கணபதிப்பிள்ளை ஓர் தமிழ்ப்புலவர் கணபதிப்பிள்ளையும் மகனும் விஷ்ணுபக்தர்கள். கிருஷ்ணன் ஓர் வரகவி. எந்த நேரத்திலும் திடீரெனக் கவிபாடுவதில் மகாநிபுணன். வரகவி சுப்பிரமணிய பாரதியாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றிப் பாடல்கள் பாடினார் கிருஷ்ணன். பறாளையில் எழுந்தருளியிருக்குங்கணேசருக்கும், சண்முகருக்கும் 'பார் தெரியுது பறாளையம் பதி" என்று தொடங்கிப் பாக்களைப் பாடினர். அப்பாக்கள் மனிதரின் மனதைக் காந்தம் ஊசியை இழுக்குமாப்போல் பறாளை கடவுளரிடம் இழுத்து பரவசமடையச் செய்யும். சைவ ஆலயங்களில் ஆடு கோழி பலியிடுவதையும், நடன தாசிகளின் நடனத்தையும் கண்டித்துப் பாடிய பாக்கள் உடனே அத்தீய செயல்களை ஒழிக்க உதவியாயிருந்தன. இதைவிட தேசீயக் கீர்த்தனைகள் எண்ணிலடங்கா. கமத்தைப்பற்றி, கைத்தொழில் பற்றி, பொருளாதாரநிலைமைபற்றி, இலங்கைத்தமிழரின் நிலைபற்றி, இலங்கையில் வாழும் இந்தியர் நிலைபற்றி, சிங்களவரின் மனோநிலைபற்றி சுயராச்சியம்பற்றி தற்காலக்கல்வி நிலைபற்றி, பனையால் உண்டாகும் பலவிதமான பிரயோசனங்கள்பற்றி, தமிழ் மொழியின் மகத்துவம் பற்றி, தமிழரின் முற்கால சீர்திருத்தம்பற்றிப் பாடிய கீர்த்தனைகளும் மற்றும் பாக்களும் எந்தத் தமிழனையும் பிரமிக்கச்செய்து உடனே செயலில் ஈடுபடுத்தக்கூடியவை. "விழித்தே எழுந்திட்டுப் பாரடா தமிழா! விபரீதம் வரவாப் பெருகுவதை" என்றும், "தெள்ளு மணிச்செந்தமிழை எள்ளி நகையாடி தள்ள எண்ணங் கொள்ளுவதும் சிங்களவர் ஏனே" என்றும் இன்னவிதமான பல தேசீயக்கீர்த்தனைகளைப் பாடி தமிழின் பெருமையையும் தமிழ்நாட்டின் நிலையையும் தமிழர் உணரும்படி செய்தனர் — அந்தப் பொன்னுலைக் கிருஷ்ணன். இது மட்டோ, இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழை வளர்க்கும் நோக்கமாக இலங்கையில், இந்தியாவில், மலாயாவில் கிருஷ்ணன் விசேடமான நாடகங்களில் நடித்து பெரும்புகழ்ஈட்டினர்.

இவர் 10-10-56 புதன் கிழமை பொன்னுலை விஷ்ணுவின் பாதாரவிந்தத்தை அடைந்தார். இது தமிழ் மக்கட்கு ஈடு செய்ய முடியாத நஷ்டம். அவன் செயல் நடக்கும். அவரின் பாக்களிற் சில அச்சுவாகனம்ஏறுமல் இருக்கின்றன. அந்தப் பகுதியை அச்சுவாகனமேற்றி உலகிற்குத் தருவதுடன் கிருஷ்ணனுக்கு ஞாபகச் சின்னம் ஒன்று பொன்னுலையில் ஏற்படுத்த வேண்டும். புலவர்களின் பெருமை அவர்கள் உயிருடன் இருக்கும் போது உலகிற்கு விளங்காது. புலவர்களை, கவிச் சக்கிரவர்த்திகளைப் போற்றுவது தமிழர் மரபும், தமிழர் பண்பாடுமாகும். வரகவி கிருஷ்ணன் ஆன்மாசாந்தியடையுமாறு அம்மை அப்பன் அருள் புரிவார்கள்.

## இந்திக்கு இராஜாஜி எதிர்ப்பு

மதுரைக் கல்லூரிகள் மாணவர் கூட்டமொன்றிலே ஸ்ரீ சி. இராசகோபாலாசாரியார் அவர்கள் பேசும்போது ஒரு இராச்சியத்திலே அப்பகுதி மொழியே அரசாங்க மொழியாதல் வேண்டும். இராச்சியங்களுக் கிடையில் நடைபெறும் அலுவல்கள் ஆங்கிலத்தில் நடைபெற வேண்டும். சென்ற இருநூறு ஆண்டு வரையிற் பயின்று வந்த ஆங்கிலத்தைக் கைவிட்டு இந்தியை வைப்பது அநீதியாகும் என்று கூறினர்.

---

## மக்கள் நெருக்கடி நீக்கவழி

மக்கள் தொகை கூடுகின்றது. உணவு நெருக்கடியும், வேலையில்லாத் திண்டாட்டமும் வேதனையைக் கொடுக்கின்றன. இவற்றின் வருத்தத்தைத் தீர்ப்பதற்கு வேறு உலகங்களில் வழிகாணவும் முயற்சிகள் நடக்கின்றனவாம். வருகிற கார்த்திகை மாசம் உருசிய தலைநகராகிய மஸ்கோவில் நடக்கவிருக்கும் விஞ்ஞானிகள் மகாநாடொன்றிலே செவ்வாய் வெள்ளி ஆகியவற்றில் மக்கள் குடியேறி வசிக்கலாகாதா, அதற்குச் சாதகமான வழிவகைகளென்ன என்று ஆராய்வார்களாம்.

## அடைவு நகை ஏல விற்பனவு

பருத்தித்துறை தும்பளை வடலிப்பாதியி லிருக்கும் அடைவு பிடிக்கும் ஸ்ரீமதி நாகப்பர் விநாசித்தம்பி அவர்களிடம் 1954 ம் ஆண்டு மாசிமாதம் 10-ம் திகதி முதல் 1955 - ம் ஆண்டு ஆடி மாதம் 31 - ம் திகதி வரையும் உள்ள மீளாத நகைகள் யாவும் 1956-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 15 ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் மேற்படியார் கடையிலிருந்து என்னூற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

கா. முத்துக்குமாருஐயர்,
வெந்தீஸ் மேஸ்தர்.

சந்திதி வேல்
பருத்தித்துறை
9-10-56.
M 374, 12, 19-10-56

## சித்தாந்த உபதேசம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

லிய சுருதிகள் எல்லாம் வீண் சொல்லாய் இழுக்குறும். கண்ணன் வசனத்திலிருந்து நாம் அறியக்கிடப்பது அருச்சுனன் ஆசங்கை ஒழிப்பதுமன்றி சிவபரத்துவமும் வலியுறுத்தப்படுகின்றது என்பதாகும்; ஆகவே சிவபரத்துவம் தெளிவாகும்பொருட்டு நமக்கு உறுதிதரும் மகாபாரதம் அருளிய வியாச முனிவரையும், அவர் அது செய்யுமாறு பிரேரித்து நின்ற அந்தரியாமியாகிய சிவபிரானையும் வணங்குவாம் என்க.

## சிங்களச் சட்டத்துக்குப் புதுப்புது விளக்கம்

—0—

தனிச்சிங்களச் சட்டத்துக்குப் புதுப்புது விளக்கங்கள் மந்திரிகளிடமிருந்தும் முதல் மந்திரியிடமிருந்தும் வந்தபடியேயிருக்கின்றன.

அகில இலங்கை ஆசிரிய சங்கத்தார் அரசாங்க சேவைப் பரீட்சை பற்றி முதல் மந்திரியுடன் பேசினர்களாம். அரசாங்க சேவைப் பிரவேசப் பரீட்சையில் சிங்களவரல்லாதவர்கள் சிங்களத்திற் சித்தி பெறவேண்டியதில்லையென்றும் ஆனல் அரசாங்க சேவையிற் சேர்ந்த பின்பு சிங்களமொழி அறிவு பெற்றுக் கொள்ளுவதாக அவர்கள் வாக்குறுதி கொடுக்க வேண்டுமென்றும், சிங்கள அறிவு பெற்ற பின்பே அவர்கள் அரசாங்கசேவையில் நிலையான இடம்பெறுவார்களென்றும் அவர் ஆசிரியர்களுக்குக் கூறினராம். தமிழ்ப் பகுதிகளிற் கடமையாற்றும் சிங்களவர் தமிழ்பேசப் பழகுதல் வேண்டுமென்றும் அப்படிப் பேசப்பழகினல் அப்பகுதிகளில் வருத்தமின்றிக் கடமையாற்றலாமென்றும் தனிச்சிங்களச்சட்டத்தால் எவருக்கும் வசதியீனம் ஏற்படாதென்றும் மேலும் அவர் கூறினராம்.

## பல்கலைக் கழகக் கல்விமொழி

பல்கலைக் கழகக் கல்வி படிப்படியாகச் சிங்கள மொழியில் ஊட்டப்பட வேண்டுமென்று பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் கூட்டமொன்றில் கலாநிதி ஜி. பி. மலலசேகர பிரேரணை ஒன்று பிரேரித்தார். அதற்குச் சாதகமாக 18 வாக்குகளும் பாதகமாக 21 வாக்குகளும் அளிக்கப்பட்டுப் பிரேரணை நிராகரிக்கப்பட்டது.

## ஒரு புத்தகம் ரூபா 600!

தனிச் சிங்களச் சட்டம் அரசாங்கப் பகுதிகளில் மின்வேகத்தில் கையாளப்பட்டு வருகின்றது. ஆனல் சர்வகலாசாலையில் அவ்வளவு விரைவிற் கருமங்கள் செய்ய முடியவில்லை. கல்வித்துறைகளில் பேரறிவு படைத்தோர் ஆசிரியர்களாயிருந்தபோதிலும் அவர்கள் தங்கள் அறிவைச் சிங்கள மொழி மூலம் மாணவருக்குக் கொடுக்க முடியாமலிருக்கின்றனர். புத்தகங்களை சிங்கள மொழியிற் பெற முடியாமலிருக்கின்றது. மொழி பெயர்த்து வெளியிடுவது ஒன்றுதான் உள்ள ஒரேயொரு வழி. ஆங்கிலத்தில் 60 ரூபாவாகவுள்ள உடல் நூல் ஒன்று சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியிடுவதானல் ரூபா 600 பெறுமதியானதாகுமாம். தனிச்சிங்களம் உடனே உண்டாக்கும் தொல்லைகளுள் இதுவொன்று.

## உருசியாவில் தமிழ் மொழி

மஸ்கோ பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிக்குப் பீடமொன்றமைக்கப்பட்டுள்ளதாம். மைசூர்ப் பல்கலைக் கழகப் போதகாசிரியரும் தருமபுர ஆதீனத் தமிழ்ப் புலவருமாகிய வித்துவான் எஸ். உருத்திரபதி எம். ஏ அவர்கள் அப்பீடத்தி லமர்வதற்கு இயைந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

## "சொல்லேயன்றிச் செயலில்லை"

காந்திக்கிராமத்தின் ஒன்பதாவது ஆண்டு விழாவிலே ஸ்ரீ சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் பேசும்போது தகுதி வாய்ந்த எதிர்க்கட்சி ஒன்று இல்லாவிட்டால் இந்திய தேசிய மாநாட்டுக் கட்சி சுயநல வேட்கையைப் பூர்த்திசெய்யும் கருத்துடையதொன்ருகிவிடும். சுதந்திரப் போர் நடத்திய காலத்தில் பிழையான வழியில் நடந்தவர்களைக் காண முடியாமலிருந்தது. ஆனல் இன்று அஹிம்சை சர்வோதயம் என்ற சொற்கள் தத்தமக்கு வேண்டியவாறு சொல்லளவிற் சொல்லப்படுகின்றனவேயன்றி உண்மையான தொண்டாற்றுவோரைக் காண்டல் கடினமாயிருக்கின்றது என்று கூறினர்.

## நீர்கொழும்பு நகரசபையில் தமிழ் ஆசிரியர்

எதிரில் வரவிருக்கின்ற நீர்கொழும்பு நகரசபைத் தேர்தலில் மேல்மாகாணத் தமிழ் ஆசிரியர்கள் போட்டியிடத் தீர்மானித்துள்ளனராம். அவர்கள் தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்துக் கேட்டுப் போட்டியிடுவார்களாம். தமிழ் மொழிப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஒன்ருக இது மேற்கொள்ளப்படுவதால் இதற்குப் பேராதரவு கிடைக்குமென்று கூறப்படுகின்றது.

## கல்விக்கழகங்களுக்கு நேரக்கட்டுப்பாடு

எந்தக் காரணத்தாலும் மாலை 5-30 மணிக்குப் பின் கல்விக் கழகங்களில் வகுப்புகள் நடத்தக்கூடாதென்று கல்வி மந்திரி ஸ்ரீ டபிள்யு. தகநாயக உத்தரவிட்டிருக்கின்ருராம். ஐந்து மணிக்குப் பின் பிராயண வசதிகள் குறைவதோடு மாணவரும் களைப்புற்றிருப்பார்கள் என்பது காரணமாகக் காட்டப்பட்டது.

## சட்டப்படி அமைந்ததா பாக்கிஸ்தான் அரசாங்கம் ?

ஸ்ரீ எச் சுகிர்தவர்தி முதல மந்திரியாகவும் ஏனையோர் சகமந்திரிகளாகவும் நியமிக்கப்பெற்றமை சட்டமுறைப்படி சரியல்லவென்று ஆட்சேபிக்கப்பட்டு கராச்சி உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடரப்பட்டிருக்கின்றதாம்.

## மற்றெரு சிங்கள பவனி

பாவற்குளம் குடியேற்றப் பகுதியிலிருந்து வவனியாவுக்குப் பவனி செல்லச் சில சிங்கள மக்கள் ஒழுங்கு செய்து பாடிகாவலரின் அனுமதி கேட்டார்களாம். தமிழ் மக்கள் வசிக்கும் பகுதிகள் மூலமாய் அவர்கள் போகவேண்டியிருந்தமையால் அனுமதி மறுக்கப்பட்டதாம்.

## இந்தியாவுக்குப் பெரும் புகழ் மாலை

விடுதலை அடைந்த பின் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றம் மிகவும் பாராட்டத்தக்கது. உலகின் மிக முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் இந்தியா இடம்பெற்றிருப்பதுகண்டு நான் மிகவும் வியப்படைகிறேன். இன்று உலக விவகாரங்களில் இந்தியா மிகுந்த செல்வாக்குள்ள நாடாக விளங்குகின்றது. ஆசியாவில் நல்ல அரசாங்கத்துக்கும் சனநாயகத்துக்கும் ஆதாரவான நாடாக இந்தியா விளங்குகின்றது. இந்தியா தனக்கு அளிக்கப்படும் எந்தப் பொறுப்பையும் நிறைவேற்றும் என்பதில் எனக்கு ஐயமில்லை என்று பிரித்தானியாவின் தொழிற்கட்சி அரசாங்க முதல் மந்திரியாயிருந்த அட்லி பிரபு பம்பாய் நகரசபையில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்திற் பேசும்போது கூறினர்.

---

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 21—10—56 —— 27—10—56. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

வழக்கத்திலும் பார்க்க இந்த வாரம் பொறுப்புக்கள் கூடுதலாயிருக்கும். விசேட கருமங்களில் தீர்மானஞ் செய்ய முடியாது நீர் வருந்துவீர். வழக்குகள் அவமானங்கள்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

உம்முடைய துன்பங்கள் பல இந்தவாரம் நீங்கிவிடும், உம்முடைய திட்டங்களை ஒழுங்குபண்ணுவது உமக்கு இலகுவாயிருக்கும். நண்பரும் இனத்தவரும் அதிக உதவியாயிருப்பர். எதிரிகள் அழிவுக்கும் இடமுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

சில நல்ல மாற்றங்களுக்கு இந்த வாரம் இடமுண்டு. உம்முடைய சொந்தச் சிக்கல்கள் சிலவற்றை நீர் நீக்கக்கூடியதாயிருக்கும். ஆனல் இன்னும் சிறிது காலத்துக்கு மனச் சமாதானமிருக்கமாட்டாது.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்

தொந்தரவுகள் நிறைந்த ஒரு வாரம். உம்முடைய நண்பர் உம்முடைய நம்பிக்கைக்குத் துரோகம் செய்யக் கூடும். கந்தோரில் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு. இயன்ற அளவுக்கு வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.

**சிங்கராசி** மகம், உத்திரம் பூரம் 1ம் பாதம்.

உம்முடைய சொந்தக் கருமங்களில் இந்தவாரம் அதிக ஆறுதலைக் காண்பீர், தனலாபமும்புகழும் நிச்சயம். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இந்த வாரம் எதிர்ப்பு நீக்குதலைக காண்பீர். தேகசுகமும் திருந்தவேண்டும். கல்விச்சித்தி நிச்சயம். கமத் தொழில்கள் நல்ல பலன்களைத் தரவேண்டும்.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

செலவு கரிக்கும். நீர் சண்டை தொடுக்க முந்துவீர். புது முயற்சிகள் விரும்பிய பலனைத் தரா. தேகசுகம் விசேட கவனம் கொடுக்கப்படவேண்டும்.

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

சொந்தச் சிக்கல்கள் தொடர்ந்து நீங்காமலேயிருக்கும், ஆனல் உம்முடைய நண்பர் உமக்கு அதிக உதவியாயிருப்பதைக் காண்பீர். தனலாபத்துக்கும் பகைவர் அழிவுக்கும் இடமுண்டு.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம், 1ம் பாதம்.

உம்முடைய நடைமுறை ஒழுங்கில் சில மாற்றங்களுக் கிடமுண்டு புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும். ஆனல் வேலை கூடுதலாயிருக்கும். எந்த விசேட கருமங்களிலும் இந்தவாரம் எழுத்திற் பிடிகொடுக்க வேண்டாம்.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்த வாரம் சில சிக்கல்கள் தாமாகவே நீங்குவதைக் காண்பீர். நண்பரும் இனத்தவர்களும் அதிக உதவியாயிருப்பர். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

உம்முடைய சொந்த வாழ்க்கையிற் சில மாற்றங்கள் விரைவில் உண்டாகக்கூடும். பணத் துறையில் நல்லவரரம் ஆனல் செலவும் அதிகரித்துக் கொண்டே வரும். பிதா வழி இனத்தவர் சிறிது காலத்துக்கு உமக்குத் தொந்தரவு செய்யக்கூடும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

நீண்ட காலத்தின் பின் உம்முடைய துன்பங்களிலிருந்து உமக்கு ஆறுதலுண்டாகின்றது. உம்முடைய நண்பர் அதிக உதவியாயிருப்பர், தனலாபமும் குடும்ப சமாதானமும் நிச்சயம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M. B. 591

வைத்திலிங்கம் கைம்பெண் நாகம்மா
தம்பிப்பிள்ளை 12/2
கிழக்கு ஒழுங்கை
வைமன் ரோட்டு யாழ்ப்பாணம்

வழக்காளி

எதிராக

1. தம்பிப்பிள்ளை சிதம்பரப் பிள்ளையும் பெண்
2. நவமணி, பண்டியதாழ்வு தற்போது இருக்கும் இடம் 'எக்சயிஸ் ஸ்ரேசன்' (மதுபான நிலையம்) மிரிகம

எதிராளி

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் M. B. 591 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956 ஞு கார்த்திகை மீ 15 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும், ரூபாய் இரண்டாயிரத்து ஐனூறு(2500/=)ரூபாய்2000/=க்கும் 21-10-55 தொடக்கம் 23-3-56 வரையும் வட்டியும் அதன் பின் கூடிய முழுத் தொகைக்கு ஐந்துவீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 196/20 அதாவது செலவளித்த செலவு ரூபாய் 130-15 வெலியாத்துச் செலவு ரூபாய் 32-90 அத்துடன் கோட்டுச் செலவு ரூபாய் 33-15 இறுக்க வேண்டியது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளியில் "பெரியவளவு" என்னும் காணி நிலப் பரப்பு 1ம் (ஒன்று) குளி 17ம் (பதினேழு) இதில் கிணறு வீடு, தென்னம்பிள்ளைகள் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு இளையதம்பி கைம்பெண் அன்னப்பிள்ளையின் ஆதனம். வடக்கு அப்புரோஸ் பெண் அலிசின் ஆதனம். மேற்கு அந்தோனிப்பிள்ளை பெண் அன்னத்தின் ஆதனம். தெற்கு கனகரெட்டினம் பெண் பொன்னம்மாவின் ஆதனமும், ஒழுங்கையும்,

இ. சனகரேத்தினம்
Commissioner of Sales
Dist. Court Jaffna
M. 387 19-10-56. (து 100)

## இந்தப் பரபரப்புக்குக் காரணர் யார்?

—0—

தமிழ்ப் பிள்ளைகளுக்குச் சிங்களம் படிப்பிப்பதில்லை என்ற தீர்மானம் தமிழ் மக்கள் யாவருக்கும் பொதுவானது. எல்லாக் கட்சியினரும் ஏற்றுக் கொண்டது. இது இப்படியிருக்க இந் நிலைமையை மாற்றுதற்கு இரகசியச் சூழ்ச்சிகள் நடக்கின்றன என்று குறிப்பிட்டு உடொனமூர்த் திட்டம் சோல்பரித்திட்டம் என்பவை வந்த காலத்திலும், இப்படிப்பட்ட சூழ்ச்சிகளே தமிழ் மக்கள் யாவரையும் அடிமை நிலைக்குக் கொண்டு வந்தன என்று சிலர் எடுத்துக் காட்டினர்.

இவை இப்படியிருக்க, வடபகுதித் தலைமை ஆசிரியர்களைக் கொழும்புக்கு அழைத்திருக்கின்றாராம் கல்வி மந்திரி. அதுபற்றி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆசிரியர்கள் கூடி ஆராய்ந்து கல்வி மந்திரி குறிப்பிட்ட 18-ந் திகதியைப் பின் போடுமாறு கேட்பதெனத் தீர்மானித்தார்களாம்.

தமிழ்ப் பகுதிகளில் சிங்களம் படிப்பிக்க முயற்சிப்பதே மேலே குறிப்பிட்ட சூழ்ச்சியாம். இத்தகைய தீய முயற்சியில் இன்றும் ஈடுபடக்கூடிய தமிழ் மக்களும் உளரா? அவர்கள் யார் என்ற பரபரப்பு எங்கும் பரவி வருகின்றது.

## திருமூலநாயனார் குருபூசை

நாள்: துர்முகி ஞு ஐப்பசி மீ சஉ (20-10-56) சனிக்கிழமை
இடம்: சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:

இரவு 6½-7. கடவுளாராதனை
,, 7 — 7-45 தமிழ்மறையோதல்
ஸ்ரீமத். தி. [illegible]சுந்தரக் குருக்கள்
,, 7-45 — 8-45 'திருமூலநாயனார்' என்னும் பொருள் பற்றிப் பிரசங்கம்
பண்டிதர், வ. மு. இரத்தினேசுவர ஐயர் அவர்கள்.

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக.

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 16-10-56,
M 386 10-10-56. (து. 150)

## கச்சேரிகளிலும் தனிச் சிங்களம்

கச்சேரிகளில் நடக்கும் அலுவல் எல்லாம் தனிச் சிங்களத்தில் நடத்துவதற்கும் கச்சேரிகள் மத்திய அரசாங்கத்துடன் தனிச் சிங்களத்திலேயே தொடர்பு வைத்தற்கும் வேண்டிய ஒழுங்குகள் செய்யப்படுகின்றனவாம்.

## விசை வண்டிச் சேவை தேசிய மாகுமாம்

இந் நாட்டிலுள்ள விசை வண்டி, (பஸ்) ச் சேவை முழுதும் தேசியமயமாக்கப்படுதல் வேண்டுமென்று அரசாங்கம் தீர்மானித்து விட்டதாம். கடினமான கருமமே யானபோதிலும் இதற்கு வேண்டிய ஒழுங்குகள் 31-3-57 க்குள் செய்யப்படுமென்பது போக்குவரத்து மந்திரியின் கருத்தாகுமென்று கூறப்படுகின்றது.

## சூவெசுப் பிணக்கில் இந்திய இரகசிய சமாதானத் திட்டம்

சூவெசுப் பிணக்கு ஐக்கிய நாட்டுச் சபையில் ஆராயப்பட்டுத் தீர்மானமொன்றும் செய்யப்படவில்லை. பேச்சுக்கள் ஜெனிவா நகரில் தொடர்ந்து நடக்கக் கூடுமென்றும் அங்கே திருப்தியான தீர்மானஞ் செய்யப்படக்கூடுமென்றும் கருதப்படுகின்றது. இந்திய பிரதிநிதி ஸ்ரீ கிருஷ்ண மேனன் நாட்டுக்குநாடு பறந்தபடியிருக்கின்றார். இரகசிய சமாதானத் திட்டமொன்றும் அவருடன் பறந்து திரிகின்றதாம். அத்திட்டத்தின் அத்திபாரக் கொள்கை யாவது உலகநாடுகளின் ஆலோசனைச் சபையுடன் சூவெசுக் கால்வாய் ஆட்சி எகிப்திய அரசாங்கத்தால் நடத்தப்படுதலாகுமாம்.

## மொழிப் போட்டி தீயது

—::—

இந்தியாவிலுள்ள பல மொழிகளின் இலக்கிய வளர்ச்சிச் சபைகளின் முன்னேற்றத்தில் நான் பெருவிருப்புடையேன். அவைகள் தங்கள் நாட்டு மொழிகளை வளர்ப்பதோடு அயல்நாட்டு மொழிகளோடும் நல்ல தொடர்புடையவையாயிருத்தல் வேண்டும். பிற நாட்டு மொழிகளுடனேயே நல்ல தொடர்பு உண்டாக்குதல் விரும்ப வேண்டியது. எம் நாட்டில் மொழிப் போட்டி உண்டாவது அறியாமையினாலேயாம். போட்டி மனமுடையோர் மொழிகளுக்கே அது தீமையை உண்டாக்கும். நல்லெண்ணத்துடனும் ஐக்கியத்துடனும் உழைத்தாலே வேறுபட்ட எங்கள் மொழிகள் நன்கு வளர்தலாகும் என்று பண்டித நேரு அவர்கள் கேரள சாகித்திய உயர் கலை மன்றத் திறப்பு விழாவுக்கு அனுப்பிய ஆசியுரையிற் கூறியுள்ளார்.

## திரை நீக்க விழா

விவேகானந்த சபையின் ஆரம்பகாலவளர்ச்சியில் அளவிடற்கரிய சேவை செய்து ஆத்மிக வளர்ச்சிக்குறுதுணை புரிந்தவரும், தற்போது மிட்னாபூரில் உள்ள இராமகிருஷ்ண சாரதாபீட மென்னும் ஸ்தாபனத்தில் உயரிய சேவை செய்து வருபவருமான ஸ்ரீமத் சுவாமி சர்வானந்தஜீ அவர்கள் எம்மிடைப் புரிந்த அளப்பரும் சேவை ஞாபகார்த்தமாக, விவேகானந்த சபை மண்டபத்தில் சுவாமிஜீ அவர்களின் உருவப் படத்தினைச் சபைத் தலைவர் திரு. கோ. அம்பாப்பிள்ளை அவர்கள் ஓ. பி. இ., சி சி எஸ்., 21-10-56 ஞாயிறு பி. ப. 3-30 மணிக்குத் திரை நீக்கம் செய்து வைப்பார்கள்.

அவ்வைபவத்தில் ஸ்ரீமத் சுவாமி பிரேமத்மானந்தஜீ அவர்களும், சேர். கந்தையா வைத்தியநாதன் சி. பி. இ. அவர்களும் பேசுவார்கள்.

## ஆன்ம ஐக்கியம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இருக்கும் தன்மையையும் ஆன்ம ஈடேற்றத்தின் தன்மையையும் நீ அறிந்திருக்கின்றாய். ஆனால் நீ உனக்கு உண்மையாயிருக்கவில்லை. சத்தியத்தைக் கடைப்பிடிக்கவில்லை. ஆகையினாலேயே நீ துன்பம் அனுபவிக்கின்றாய். வாய்வேதாந்தம் உண்மையற்றதென்பதை நீ அறிவாய். அதை விட்டு உண்மையாய்ச் செய்ய வேண்டியது ஒன்றைச் செய். அதை இப்பொழுதே செய். காலதாமசமின்றித் தியானஞ் செய்ய இப்பொழுதே தொடங்கு. உனக்குள்ளே என்றென்றுமுள்ள சமாதானத்தையும் இன்பத்தையும் உடனே அனுபவிப்பாய். எல்லோரையும் நேசித்து எல்லோருக்கும் சேவை செய்து யாவருக்குமுள்ள ஒருமைப்பாட்டை உணர்வாயாக.

..........ஸ்ரீ, சுவாமி சிவானந்தா

## மாணவர் ஒழுக்க மின்மைக்கு ஏது

"மாணவர்களிடையே ஒழுங்கின்மை நிலவுவது நாட்டின் சக்தியையும், பெருமையையும் குலைக்கும் ஒருநோயாகும். இத்தகைய தீய நிலைமையைப் போக்குவதற்குக் கல்வி நிலையங்கள் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்" சில சமயங்களில் மாணவர்களுக்கிடையே ஒழுங்கின்மை நிலவுகிறது. இதனால் அரசாங்கத்துக்கும், நாட்டு மக்களுக்கும் பெரும் பீதி ஏற்படுகிறது. கல்விமுறையில் குறையிருப்பதே இத்தகைய ஒழுங்கின்மை ஏற்படுவதக்குக் காரணம் என்று இந்தியசிரமைப்புத்துறைத் துணை அமைச்சர் ஸ்ரீ ஜே. கே. பான்சுலே அவர்கள் பிருந்தாவன் இளைஞர்விளையாட்டு மன்றம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசும் போது கூறினர்.


யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாப நிதி

1918-ம் ஆ[illegible] ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கோடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14


உ

# பொற்கிழி அளிப்பு விழா

நிகழும் துர்முகி ஆண்டு ஐப்பசித் திங்கள் பன்னிரண்டாம் நாள் (28-10-56) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சைவபரிபாலனசபை நாவலர் மண்டபத்தில், உடுவில் தமிழ்ப் புலவர் வ. மு. இரத்தினேசுவரஐயர் அவர்களுக்குப் பொற்கிழி வழங்கப்பெறும்

அத்தருணம் முடிக்குரிய நியாயவாதி உயர்திரு. த. முத்துச்சாமிப்பிள்ளையவர்கள் தலைமை தாங்குவார்கள். பல அன்பர்கள் பாராட்டுரை பகர்வார்கள். தமிழன்பர்களின் வரவைப் பெரிதும் விரும்புகின்றோம்.

இங்ஙனம்
மு. மயில்வாகனம்
இரத்தினேசுவர ஐயர் உதவிநிதிக் காரியதரிசி
கு. அம்பலவாணர்
தனாதிகாரி

யாழ்ப்பாணம்
15—10—56.
M 381 19-10, 26-10

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு இலக்கம் M B/412.

உரும்பிராய்கிழக்கு சின்னப்பா அழகரத்தினம் கைம்பெண் பொன்னம்மா வழக்காளி.

விரோதமாக

தாவடி சின்னையாநாகராசாவும் (2) பெண் நாகரத்தினமும் எதிரிகள்.

மேற்குறித்த இலக்க வழக்கில் குறித்த கோட்டார் எனக்கனுப்பிய கமிஷன் கட்டளைப் பிரகாரம் இதன் கீழ்க் காணப்படும் ஆதனம் 1956ம் ஆ. நவம்பர் மீ 24 உ (கார்த்திகை 9) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலி வடக்கு உடுவிற் கோவிற்பற்று தாவடி இறை கருங்காலியடி நிலப்பரப்புமூன்று (3) இதில் கிழக்குப் பக்கம் நிந்தமாகப் பிரிவிடப்பட்ட நிலப்பரப்பு ஒன்றரை (1½ யும். வீடும் பயிர்வகைகளும் வடமேற்கேயிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும். இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை. வடக்கு காசிப்பிள்ளை பெண் பொன்னம்மாவின் ஆதனம். மேற்கு இக் காணி முழுவதின் மிகுதிப் பாகம். இவ்வெல்லைகளுக்குட்பட்டகாணி முழுவதும் இதைச் சேர்ந்தவைகளும்.

பெ. முத்துத்தம்பி
வெந்திஸ் கமிஷனர்.

சுதுமலை தெற்கு
மானிப்பாய், 1956ம் ஆ.
ஒக்றோபர் மீ 5ம் உ
M 379 19-10-56.(து. 100)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஊர்காவற்றுறை
றிக்குவெஸ்ற் கோட்டில்
1. புங்குடுதீவு மேற்கு முருகுப்பிள்ளை நாகலிங்கம்
2. டெயூர் ரேஸ் சற்குணம் வழக்காளிகள்,

இல. 7672

எதிராக

1 புங்குடுதீவு மேற்கு விசுவலிங்கம் செல்லையா
2 டெயூர் பெண் சிவபாக்கியம்
3. புங்குடுதீவு கிழக்கு இராமனுதர் கந்தையா
4. டெயூர் பெண் பாக்கியம் எதிராளிகள்.

ஊர்காவற்றுறை றிக்குவெஸ்ற் கோட்டின் 7672ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956ஹூ கார்த்திகை மீ 10 உ சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 200 = ம் இதற்கு 16-3-56 தொடக்கம் இறுக்கும் வரை ஐந்துவித வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 36-85 சதம்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி, புங்குடுதீவுக் கோவிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை "வண்ணுமுத்தம்" பர. நீ. இல. பத்து (பர நீ. இல. 10) செய்பயிர் வான்பயிர்களும் வீடுகளும் கிணறும். எல்லை கிழக்கு ஆறுமுகம் பெண் செங்கமலத்திற்கும் பங்காளருக்குமுரிய வாதனம்,வடக்குநல்லதம்பி கைம்பெண் வள்ளியம்மைப்பிள்ளையின் ஆதனம், மேற்கு நல்லதம்பி கைம்பெண் நாகமுத்துவின் ஆதனம், தெற்கு ஆறுமுகம் பெண் சின்னம்மாவிற்கும் பங்காளருக்கும் மறுபேருக்குமுரிய வாதனங்கள் இதடங்கலும்.

1956ஹூ புரட்டாசிமீ 20-ம்திகதி

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்,
காரைநகர்,
M. 384 19-10-56 (து. 300)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB 480
இராமலிங்கம் கைம்பெண் பொன்னம்மா
நல்லூர், யாழ்ப்பாணம். வழக்காளி.

எதிர்

1 விஞசித்தம்பி பெரியதம்பியும்
2 பெண் அமுதமும்
கொக்குவில் கிழக்கு யாழ்ப்பாணம், எதிராளிகள்.

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் MB 480 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956ஹூ கார்த்திகைமீ 24-ம்உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரதித்த ஏலத்தில் விற்கப்படும்.

முதலாம் இரண்டாம் எதிரிகள் வழக்காளிக்குக் கொடுக்க வேண்டிய தொகை ரூபாய் 743 – ம் 400-ரூபாய்க்கு 12 வீத வட்டியும் 1-9–55 முதல் 6–2–56 வரைக்கும் அதன் பின் கூடிய வட்டிக்கும் முதலுக்கும் பணம் கொடுக்கும் வரைக்கும் ஐந்துவித வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 144/65 கொடுக்கவேண்டியது.

### காணி விபரம்

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த கொக்குவிலில் மடத்திருப்புலம் என்னும் காணி நீ. இ. 1¼ கிழக்குப் பக்கத்திலுள்ள கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழி வாய்க்கால் உருத்தும் இந்தக் காணியில் மிகுதியானதில் வடக்கு எல்லைப் பக்கமாக. எல்லை கிழக்கு கதிரிப்பிள்ளை சண்முகம் பெண் அம்மராசா வடக்கு கை ஒழுங்கை மேற்கு நடராசா பெண் மங்களம். தெற்கு ஆறுமுகம் முருகேசு கைம்பெண் அன்னம்மா இவை அடங்கலும்.

வ. அ. துரையப்பா,
கொமிஷனர்

யாழ்ப்பாணம்
5-10-56.
M, 382 18-10-56 (து. 100)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்
1 அச்சுவேலி தாமோதாம் குணரெட்டினம்
2 பெண் பரமேசுவரியும் வழக்காளிகள்

இல M B 250

எதிராக

தம்பாலை
1 வல்லிபுரம் பொன்னையாவும் பெண்
2 முத்தம்மாவும் எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 250 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1956ஹூ கார்த்திகை மீ 24உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபா 1263-70 ம் இதற்குத் தீர்வைத்திகதி தொடக்கம் 1000 க்கு 10 வீத வட்டி 19-5-55 தொடக்கம் 1-11-55 வரைக்கும் அதன் மேல் முழுத் தொகைக்கும் 1-11-55 தொடக்கம் இறுக்கும் வரைச்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 194.35

### காணி விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலி கோவிற்பற்று பத்தவேளி இறை கும்பகிணற்றடி பரப்பு நில இலா 2¾ வான்பயிர்களும் எல்லை கிழக்கு சரவணமுத்து பெண் வள்ளியம்மாளுக்கும் பங்காளருக்கும் உள்ள

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு வழக்கு இல. 10599
வட்டுக்கோட்டை கிழக்கு முருகேசு கந்தஞானி — வழக்காளி

எதிராக

சங்கானை கிழக்கு
1 தம்பு முத்தையாவும்
2 பெண் சின்னத்தங்கச்சியும் — எதிரிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் குறித்த கோட்டார் எனக்கனுப்பிய கமிஷன் கட்டளைப் பிரகாரம் இதன்கீழ்க் காணப்படும் காணிகள் 1956-ம் ஆண்டு டிசெம்பர்மீ 15 உ (மார்கழி 1) சனிக்கிழமை முற்பகல் 10 மணி துவக்கம் குறித்த காணிக்குள் நின்று பிரசிதத ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### காணிகளின் விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிமேற்கு சங்கானைக் கோவிற்பற்று சங்கானை இறை சந்தி தோட்டமும் செம்மண் கடவையும், நிலப்பரப்பு மூன்றும் (3ம்) வீடும் செய்வான் பயிர்களும், எல்லை கிழக்கு நாகமணி பெண் சின்னத்தங்கத்தின் ஆதனம், வடக்கு ஆறுமுகம் கணபதிப்பிள்ளைக்கும் பெண் சின்னக்குட்டிக்குமுரிய வாதனமும் கிணற்றுக்குப் போகும் பாதை முகப்பும் மேற்கு வயித்தி கார்த்திகேசுவுக்கும் மறுபெயர்களுககுமுரிய ஆதனங்கள், தெற்கு விநாயகர் பொன்னருக்குரிய ஆதனம் இதடங்கலும் சொல்லப்பட்ட சின்னத்தங்கத்துக்குரி. கிழக்கெல்லைக் காணியிலிருககும்கிணற்றுப் பங்குடன் தார்வையும் மூன்றுமுழ அகலங்கொண்ட வழியும் வாய்க்காலும், இக்காணி யாழ்ப்பாணம் பதிவு கந்தோரில் E 224/125 ல் பதிவுசெய்யப்பெற்றது.

2 மேற்படி சங்கானை இறை வள்ளியாவயலும், பெரியவயலும் மறுபிரிவுகளும் நிலப்புரப்பு 11ம் குளி 3 1/4 ம் இணறும் எல்லை கிழக்கு பண்டாரம் சிவரத்தினத்துக்தும் மகாதேவ பிள்ளையார் கோவிலுக்கும் உரிய காணிகள், வடக்கு மாணிக்கவாசகர் பெண் சிவகாமிப்பிள்ளைக்குரிய ஆதனம், மேற்கும் தெற்கும்அம்பலவாணசுவாமி கோயிலாதனம், ஆனல் குறித்த கிணற்றில் மறுபெயர்களுககுரிய பங்குகள் புறநீங்கல். இக்காணியில் சொரியலாய் நிலப்பரப்பு 2½ யு மிதைச் சேர்ந்தவைகளும், இக்காணி யாழ்ப்பாணப் பதிவு பதிவு கந்தோரில் E 283/184 ல் பதியப்பெற்றது.

பெ. முத்துத்தம்பி
வெந்திஸ் கமிஷனர்.

சுதுமலை தெற்கு
மானிப்பாய்
1956-ம்ஆ ஒக்டோபர் மீ 10 உ
M. 378 19.10.56. து 100)

காணி வடக்கு ஒழுங்கை மேற்கு கதிரித்தம்பி வேலும்மயிலுவுக்குடைய காணி, தெற்கு கதிரித்தம்பி கைம்பெண் ஆசைப்பிள்ளையின் காணி. இதில் சொரியலாய் 2/3 பங்கு இது K 147/149–ல் பதியப்பட்டிருங்கிறது.

2 மேற்படி கதிரிப்பாய் இறை மளவராயன் கலட்டியும் மறு பிரிவுகளும் பர நில இலா 20 குழி 9ம் இதில் வடக்குப் பக்கமாக நிந்தமான பர நில இலா 5ம கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு கந்தர் முத்தையாவின் உரிமைக்காரரின் காணி வடக்கு பொன்னம்பலம் நாகலிங்கத்தின் காணி மேற்கு ஒழுங்கை தெற்கு இராசநாயகம் பெண் வள்ளியம்மாவின் காணி இது K 150/64 பதியப்பட்டிருக்கிறது

சே. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.

51, 4ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்
15-10-56
M 380 19-10 (து 200)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
1. புங்குடுதீவு கிழக்கு இராமனுதர் கந்தையாவும்
2, டெயூர் பெண் பாக்கியம்மாவும் —வழக்காளிகள்.

இல. MB/4

எதிராக:

1. முதலாம் வட்டாரம் வடக்குப் பெருங்காடு புங்குடுதீவு மேற்கில் வசிக்கும் விசுவலிங்கம் செல்லையாவும்
2. டெயூர் பெண் சிவபாக்கியமும் —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB/4-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி. பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956ஹூ கார்த்திகைமீ 14-ம் திகதி புதன்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா: 685/= ம் ரூபா: 350/= க்கு 8 - 1 - 55 தொடக்கம் 10 – 5 – 56 வரை 12 வீதமான வட்டியும் அதன் மேல் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 விதமான வட்டியும் கோட்டுச் செலவும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடு தீவுக் கோவிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை "வண்ணுமுற்றம்" பர. நீ. இல. பத்து (பர நீ. இல. 10, செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு ஆறுமுகம் கைம்பெண் செங்கமலத்திற்கும் பங்காளருக்குமுரியவாதனம், வடக்கு நல்லதம்பி கைம்பெண் வள்ளியம்மைக்குரியவாதனம், மேற்கு முருகேசு பெண் நாகமுத்துவிற்குரியவாதனம், தெற்கு ஆறுமுகம் பெண் சின்னம்மாவிற்கும் பங்காளருக்கும் மறுபேருக்குமுரிய வாதனம் இதடங்கலும்.

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனர்

காரைநகர்
25-9-56
M 385 19-10-56 து 300 )

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—O—

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு வழக்கு இலக்கம். M. B/922

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு 1840ம் இலக்க உரிமைத் தத்துவ வழக்கில் காலஞ் சென்ற கே. சுவாமிநாதனுடைய ஆஸ்திக்கு மரணசாதன தத்துவகாரர். மானிப்பாய் இப்பொழுது கொழும்பு 9 டிக்மன்ஸ் ஒழுங்கை
(1) சுவாமிநாதன் மகாதேவாவும்
(2) சுவாமிநாதன் கனகசபையும்
(3) சுவாமிநாதன் இரத்தின கோபாலுவும். —வழக்காளிகள்

எதிராக

மானிப்பாய் தன்னை
(1) அம்பலவி அரியகுட்டியும்
(2) வேலன் கிட்டினனும் எதிரிகள்.

மேற்குறித்த இலக்க வழக்கில் குறித்த கோட்டார் எனககனுப்பிய கமிஷன் கட்டளைப்பிரகாரம் இதன் கீழ்க் காணப்படும் காணி 1956ம் ஆ. டிசெம்பர் மீ 22 உ (மார்க்கழி 8) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிமேற்கு மானிப்பாய்க் கோயிற்பற்று மானிப்பாயிறை கிராத் தோட்டம் நிலப்பரப்பு (4¾) நாலே முக்காலும் பனைகளும் எல்லை கிழக்கு ஐயன் பெண் சிதம்பரத்துக்குரிய காணி வடக்கு சின்னட்டியன் கந்தனுக்குரிய காணி, மேற்கு நன்னியன் மாரிமுத்தனுக்குரியகாணி தெற்கு இராமன் அம்பலவிக்கும் பங்காளருக்கும் உரிய காணி, இக்காணி முழுவதுடன் இதற்குத் தெற்குப் பக்கத்திலிருக்கும் வேலன் கிட்ணனுடைய காணிக்கூடாகப் போகும் பாதை உரித்தும். மறு விபரம் அறிய விரும்புவோர் வழக்காளிகளின் புறக்றர் திரு. எஸ். திருநாவுக்கரசிடம் அறிந்து கொள்ளவும்.

பெ. முத்துத்தம்பி
வெந்திஸ்கமிஷனர்,

சுதுமலை தெற்கு,
மானிப்பாய் 1956ம் ஆ
ஒக்டோபர் மீ 16ம் உ
M 383 19 10-56 (து 100)


உ

வெளிவந்துவிட்டது

# தஞ்சைவாணன் கோவை

சொக்கப்பநாவலர் உரை

(இரண்டாம் பதிப்பு)

வித்துவான் ந. சுப்பையபிள்ளை
அவர்களால்

திருத்திப் புதுக்கி அமைக்கப்பெற்றது.

அதிபர் சைவப்பிரகாச யந்திரசாலையிடம் பெற்றுக்கொள்ளலாம்.

விலை ரூபா: 6-00


வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 19.10 56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.